# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2014 ஒக்டோபர் மாதம் 21 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

I. தவிசாளரின் அறிவிப்புக்கள்

II. அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்

III. செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

IV. மனுக்கள்

V. கேள்விகள்

**01.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு ,காணி ,கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் ,மனிதவலு அத்துடன் தொழில் வாய்ப்பு , பொறியியல் சேவை அத்துடன் தகவல் அமைச்சரிடம் 2014.10.07 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (□/vi (1)14/39)**

அ. சிறீ ஜயவர்தனபுர கல்வி வலயத்திற்குரிய மாகாண சபை பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஆ. அப் பாடசாலைகளின் 2, 3, 4 அத்துடன் 5 ஆம் தரங்களில் எழுத்துக்களை எழுத அத்துடன் வாசிக்க தெரியாத பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு ?

இ. பாடசாலை அத்துடன் தரங்களுக்கு இணங்க எழுதுவதற்கு அத்துடன் வாசிப்பதற்கு இயலாத எண்ணிக்கை தொடர்பாக அறிக்கை ஒன்றினைப் பெற்றுக் கொடுப்பீர்களா ?

ஈ. இல்லையாயின் ஏன் ?

**02.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு ,காணி ,கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் ,மனிதவலு அத்துடன் தொழில் வாய்ப்பு , பொறியியல் சேவை அத்துடன் தகவல் அமைச்சரிடம் 2014.10.07 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (□/vi (1)14/40)**

அ. ஹோமாகம கல்வி வலயத்திற்குரிய மாகாண சபை பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஆ. அப் பாடசாலைகளின் 2, 3, 4 அத்துடன் 5 ஆம் தரங்களில் எழுத்துக்களை எழுத அத்துடன் வாசிக்க தெரியாத பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு ?

இ. பாடசாலை அத்துடன் தரங்களுக்கு இணங்க எழுதுவதற்கு அத்துடன் வாசிப்பதற்கு இயலாத எண்ணிக்கை தொடர்பான அறிக்கை ஒன்றினைப் பெற்றுக் கொடுப்பீர்களா ?

ஈ. இல்லையாயின் ஏன் ?

**03.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு ,காணி ,கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் ,மனிதவலு அத்துடன் தொழில் வாய்ப்பு , பொறியியல் சேவை அத்துடன் தகவல் அமைச்சரிடம் 2014.10.07 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (□/vi (1)14/41)**

அ. பிலியந்தலை கல்வி வலயத்திற்குரிய மாகாண சபை பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஆ. அப் பாடசாலைகளின் 2, 3, 4 அத்துடன் 5 ஆம் தரங்களில் எழுத்துக்களை எழுத அத்துடன் வாசிக்க இயலாத பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு ?

இ. பாடசாலை அத்துடன் தரங்களுக்கு இணங்க எழுதுவதற்கு அத்துடன் வாசிப்பதற்கு இயலாத எண்ணிக்கை தொடர்பான அறிக்கை ஒன்றினைப் பெற்றுக் கொடுப்பீர்களா ?

ஈ. இல்லையாயின் ஏன் ?

**04.** **கௌரவ எஸ்.எம். மரிக்கார் உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு ,காணி ,கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் ,மனிதவலு அத்துடன் தொழில் வாய்ப்பு , பொறியியல் சேவை அத்துடன் தகவல் அமைச்சரிடம் 2014.10.07 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (□/vi (1)14/42)**

அ. தெஹிவளை, கல்கிஸ்சை மாநகர சபையின் அதிகார பிரதேசத்திற்கு உரிய கல்கிஸ்சை பொது மயானத்தினுள் பழுதுபார்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. இப் பழுதுபார்ப்பு நடவடிக்கை எந்த அரச அல்லது அரச சார்பற்ற தாபனங்களின் கீழ் இடம்பெறுகின்றது என்பதனை குறிப்பிடுகின்றீர்களா ?

இ. i. அந்த நிர்மாண நடவடிக்கைக்காக விலை மனுவினைக் கோருவது மேற்கொள்ளப்பட்டுள்ளதா ?
ii. அந்த நிர்மாண நடவடிக்கை மேற்பார்வை செய்யப்படுகின்றதா ? அப்படியாயின் அது எந்த தாபனத்தினால் ?

ஈ. இப் பழுதுபார்ப்பு நடவடிக்கையின் ஊடாக காலி வீதிக்கு சமாந்தரமாக பொது மயானத்தினுள் காணப்பட்ட பெறுமதி மிக்க தேக்க மரங்கள் பலவற்றை வெட்டி அகற்ற சட்ட ரீதியாக அங்கீகாரம் ஒன்று வழங்கப்பட்டிருந்ததா ?

உ. அப்படியாயின் அவ் அங்கீகாரத்தை வழங்கிய அரச அல்லது மாகாண தாபனத்தைக் குறிப்பிட முடியுமா ?

ஊ. அவ்வாறு வெட்டி அகற்றப்பட்ட பெறுமதி மிக்க தேக்க மரக் குற்றிகள் தொடர்பாக எடுக்கும் நடவடிக்கை யாது ?

எ. அம் மரக் குற்றிகள் விற்கப்பட்டிருந்தால் அதற்காகக் கிடைக்கப்பெற்ற நிதி தொடர்பாக எடுக்கப்பட்ட செயற்பாட்டினை தெளிவுபடுத்துவீர்களா ?

- **நடவடிக்கை ஒழுங்கு விதி இல 31(அ) (1) ஏற்பாடுகளுக்கு இணங்க பதில் கொடுப்பதற்கு காலம் கேட்கப்பட்ட கேள்வி**

**05.** **கௌரவ ஜகத் விதான உறுப்பினரினால் கௌரவ போக்குவரத்து ,விளையாட்டு ,இளைஞர் விவகாரம் ,மகளிர் விவகாரம் ,உணவு வழங்கல் மற்றும் பகிர்ந்தளிப்பு நடவடிக்கை ,கூட்டுறவு அபிவிருத்தி ,வீட்டுப் பொருளாதார மேம்பாடு ,கடற்றொழில் ,கிராம அபிவிருத்தி ,சுற்றுலாத் துறை ,முதலீட்டு மேம்பாட்டு இணைப்பு அத்துடன் கால்நடை உற்பத்தி மற்றும் அபிவிருத்தி அமைச்சரிடம் 2014.10.07 ஆந் திகதி சபை ஒத்திவைப்பு வேளையில் கேட்கப்பட்ட கேள்வி : (□/vi (1)14/ADG-01)**

i. மேல் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபைக்கு மேல் மாகாணத்தினுள் உள்வரும், மற்றும் வெளிச் செல்லும் தூரப் பயணச் சேவைக்குரிய பஸ்வண்டிகள் அல்லது போக்குவரத்து ஆணைக்குழுச் சபைக்கு (NTC) உரிய பஸ் வண்டிகளை பரிசோதனை செய்வதற்கு அதிகாரம் காணப்படுகின்றதா ?

அ) அவ்வாறு அதிகாரம் இல்லாத விடத்து ஏனைய மாகாண சபைகளின் மூலம் அம் மாகாண சபைகளின் அதிகார பிரதேசத்திற்கு இவ் பஸ் வண்டிகள் உற்புகும், அத்துடன் வெளிச் செல்லும் போது பரிசோதனை நடாத்துவது தண்டப் பத்திரங்களை வழங்குவது, உட்புகும் கட்டணங்களை பெற்றுக் கொள்வது என்பன எவ்வாறு இடம்பெறுகின்றன ?

ii. மேல் மாகாண வீதிப் போக்குவரத்து அதிகார சபையின் மூலம் இவ்வாறு பஸ் வண்டிகளை பரிசோதனைக்கு உட்படுத்தாததன் காரணமாக மேல் மாகாணப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபைக்கு உரிய பஸ் வண்டி உரிமையாளர்கள் மிகவும் கஷ்டமான நிலைமை ஒன்றுக்கு உட்பட்டுள்ளனர் என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

iii. பெஸ்தியன் மாவத்தை பஸ் நிலையத்தில் இருந்து பயணிகள் போக்குவரத்து அதிகார சபைக்கு பஸ்களில் உட்புகும் கட்டணம் கிடைக்கப் பெற்றுள்ளதா ?

அ) இதற்கு முன் இருந்த மாகாண போக்குவரத்து அமைச்சர், மற்றும் போக்குவரத்து அதிகார சபையின் தலைவரினால் இந்த அதிகார சபையின் அதிகாரங்கள் வேண்டும் என்றே வெட்டப்பட்டுள்ளன என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ) மீண்டும் இவ் அதிகார சபையின் அதிகாரத்தை மாகாண போக்குவரத்து அதிகார சபைக்கு உரியதாக்கிக் கொள்ள நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்களா ?

**06.** **கௌரவ நளிந்த ஜயதிஸ்ஸ உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர், மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு ,காணி ,கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் ,மனிதவலு அத்துடன் தொழில் வாய்ப்பு , பொறியியல் சேவை அத்துடன் தகவல் அமைச்சரிடம் கேட்பதற்கு :**

**(□/vi (1)14/43)**

அ. களுத்துறை பிரதேச சபையின் மூலம் ஒழுங்குசெய்யப்பட்ட “பொசன் பூங்கா 2014” இற்காக எத்தனை வெளிச்சக் கூட்டுக் கருமபீடங்கள் நிர்மாணிக்கப்பட்டன ?

ஆ. அக் கூடுகளை நிர்மாணிப்பதற்காக தனியார் தாபனங்களில் இருந்து விலை மனு கோரப்பட்டதா ? அது எத்தனை கருமபீடங்களுக்காக ?

இ. அந்த விலை மனுவினைப் பெற்றுக் கொண்ட தாபனம் எது ? அத் தாபனம் 40 கருமபீடங்களுக்காக முன்வைத்த விலைப் பட்டியல் எவ்வளவு ?

ஈ. அத் தாபனத்தின் மூலம் 15 - 15 அடி கருமபீடங்கள் எத்தனை நிர்மாணிக்கப்பட்டன ? அதற்காக செலுத்தப்பட்ட நிதி எவ்வளவு ?

உ. அத் தாபனத்தின் மூலம் 10 - 10 அடி கருமபீடங்கள் எத்தனை நிர்மாணிக்கப்பட்டன ? அதற்காக செலுத்தப்பட்ட நிதி எவ்வளவு ?

**07.** **கௌரவ நளிந்த ஜயதிஸ்ஸ உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர், மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு ,காணி ,கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் ,மனிதவலு, அத்துடன் தொழில் வாய்ப்பு , பொறியியல் சேவை அத்துடன் தகவல் அமைச்சரிடம் கேட்பதற்கு :**

**(□/vi (1)14/44)**

அ. 2014 யூன் 12-14 காலப்பகுதியில் களுத்துறை பிரதேச சபையினால் களுத்துறை நாகொட கல்அஸ்ஸ பிரதேசத்தில் பொசன் வலையமொன்று நடாத்தப்பட்டதா ?

ஆ. அவ் வலயத்திற்காக செலவு செய்த மொத்த நிதி எவ்வளவு ? அதில் பிரதேச சபையினால் செலவு செய்த நிதி எவ்வளவு ?

இ. சபையினால் நிர்மாணிக்கப்பட்ட தோரணம், பொசொன் வலயத்தின் ஒலிபெருக்கி, இயந்திரம், மேடை நிர்மாணம், மின்சார வெளிச்ச அலங்கரிப்பு, வெளிச்சக் கூடு நிர்மாண விடயங்களுக்கு உரிய கொடுப்பனவு எத் தினங்களில் எத் தாபனத்திற்கு எவ் உறுதிச்சீட்டு இலக்கத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது ?

ஈ. அக் காசோலையை பிரதேச சபையின் சார்பில் எவர் பொறுப்பேற்றுள்ளார் ? அந் நபர் தற்போது பிரதேச சபையில் வகிக்கும் பதவி யாது ?

உ. இந்த ஒவ்வொரு அம்சங்களுக்குமான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு பிரசே சபையின் அங்கீகாரம் எப்போது பெறப்பட்டது ?

ஊ. இக் கொடுப்பனவின் போது பிரதேச சபையின் தலைவரினால் நிதிப் பிரமாணம் மற்றும் சபை ஒழுங்கு விதிகள் மீறப்பட்டுள்ளனவா ?

எ. அவ்வாறு காணப்பட்டால் அதற்காக எடுக்கும் நடவடிக்கை யாது ?

**08.** **கௌரவ எட்வட் குணசேகர உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு ,காணி ,கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் ,மனிதவலு அத்துடன் தொழில் வாய்ப்பு , பொறியியல் சேவை அத்துடன் தகவல் அமைச்சரிடம் கேட்பதற்கு :**

**(□/vi (1)14/45)**

அ. “கம்பஹா அறுநோதய” என்ற பெயரில் சீதுவ நகர சபைக்கு உரிய எமன்தொலுவ - குறுந்துவத்தை வீதியை ரூபா 9.3 மில்லியனை செலவு செய்து அபிவிருத்தி செய்வதாகக் குறிப்பிட்டு மேன்மை தங்கிய ஜனாதிபதியினதும் அமைச்சர் பெசில் ராஜபக்ஷ அவர்களினதும், அத்துடன் அமைச்சர் சுதர்சி பிரணாந்துப் பிள்ளை அவர்களினதும் உருவப் படங்களுடனான பெயர்ப் பலகை ஒன்று மேல் மாகாண சபை தேர்தலுக்கு முன்னர் மாகாண சபை தேர்தல் அபேட்சகர்களின் பங்குபற்றலுடன் கோலாகலமாக

பொருத்தப்பட்டு வீதியின் அபிவிருத்தி நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஆ. அவ் வீதி அபிவிருத்திக்குரிய பொறுப்பு எத் தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்டது என்பதனைக் குறிப்பிடுவீர்களா ?

இ. அப் பெயர் பலகையில் காணப்பட்ட படி அந்த ரூபா 9.3 மில்லியன் நிதியினைச் செலவு செய்து வீதி அபிவிருத்தி செய்யப்பட்டதா ?

ஈ. அப்படி இல்லையாயின், அந் நிதி வேறு ஏதாவது நடவடிக்கை ஒன்றுக்காக பயன்படுத்தப்பட்டதா ?

உ. இன்று அவ் வீதி பெருமளவு தூர்ந்து போய் உள்ளதால் பிரதேச மக்களுக்கு நடந்து செல்வதற்கும் கூட கஷ்டமான நிலை ஒன்று ஏற்பட்டுள்ளது என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஊ. அவ் வீதியினை அபிவிருத்தி செய்யத் தேவையான நடவடிக்கை எடுப்பீர்களா ?

எ. அப்படியாயின் அது எப்போது ?

## VI. வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை

## VII. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும்

## VIII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## IX. சபை நடவடிக்கை (I)

**கௌரவ சபை நடவடிக்கை அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு :**

பிரேரணை :

*"இன்றைய தினம் பொது நடவடிக்கை முன்னுரிமை பெற வேண்டும்."*

### சபை நடவடிக்கை (II)

**கௌரவ சபை நடவடிக்கை அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு :**

பிரேரணை :

*"இன்றைய தினத்திற்கு உரிய நிகழ்ச்சி நிரலில் பொது நடவடிக்கை விடயத்தின் கீழ் காணப்படும் செயற்பாடுகள் நடவடிக்கை ஒழுங்கு விதி இலக்கம் 52(5), 57(4) மற்றும் 57(5) ஆகிய வற்றில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளில் இருந்து விடுவிக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும்."*

## X. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

**01. கௌரவ சுனில் வடகல அவர்கள்**

"ஒன் லையின் அதிர்ஷ்ட இலாபமீட்டு வியாபாரம் 2014 ஏப்ரல் மாதம் முதலாவது வாரம் தொடக்கம் நடைமுறைக்கு வருவதுடன் அதன் தலைமையகம் கொழும்பு 02 நவம் மாவத்தை யில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது மேலும் நாடு பூராகவும் அவ்வாறான நிலையங்கள் 3000 த்தினை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இது அதிர்ஷ்ட இலாபம் என்ற போர்வையிலான சூது ஒன்றாகுவதுடன், எங்கள் நாட்டின் இளைஞர்கள் வேகமாக அதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர் இதனூடாக லொட்டோ மற்றும் ஜெக்பொட் ஆகிய விளையாட்டுக்களும் உள்ளடக்கப்பட்டிருப்பதும் வீட்டில் இருந்தும் கூட இவ் அதிர்ஷ்ட இலாபச் சீட்டில் பங்குபற்றக் கூடியதாக இருப்பதும், இதில் காணப்படும் பயங்கரமான விடயமாகும். இந்த அழிவில் இருந்து மேல் மாகாண மக்களை மீட்டெடுப்பது மாகாண சபையின் முக்கிய கடமையும், பொறுப்பும் ஆகிய படியால் இவ்வாறான வியாபாரங்களுக்கு உதவி ஒத்தாசைகளை எல்லா பொறுப்புச் சொல்ல வேண்டிய நபர்களும், மற்றும் தாபனங்களும் வழங்காமல் இருக்க வேண்டும் என இந்த மேல் மாகாண மாகாண சபை கருதுகிறது."

**(பி/vi (1)14/06)**

**02. கௌரவ எம். ரோஸ் பிரணாந்து அவர்கள்**

மேல் மாகாணத்தில் அமைந்துள்ள சில நீதிமன்ற அதிகார எல்லைகளை மீண்டும் நிர்ணயம் செய்து புதிய நீதி மன்ற வலயங்களாக ஒதுக்குவதற்கும், அதற்கிணங்க கடமைகளையும் பொறுப்புக்களையும் ஒப்படைப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுத்துள்ள போதும் அதில் ஒழுங்கான முறை ஒன்றினை கடைப் பிடிக்காததினால்

மக்களுக்கு பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க ஏற்பட்டுள்ளதுடன் பெருமளவான பணம் வீண் விரயமாவதும் இடம் பெறுகின்றது மக்களுக்கும், பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும், அதேபோல் ஏனைய அரச உத்தியோகத்தர்களுக்கும் சமீபமாக நீதிமன்றம் ஒன்று காணப்படும் போது வாகனத்திற்காக எண்ணெயைச் செலவு செய்து தூரத்தில் அமைந்துள்ள நீதிமன்றங்களுக்கு பயணிக்க வேண்டியுள்ளது. எனவே இவ் எல்லா விடயங்களையும் ஒழுங்கான மேற்பார்வைக்கு உட்படுத்தி, முறையான அனுபவம் உள்ள உத்தியோகத்தர்களைக் கொண்ட குழாம் ஒன்றின் மூலம் இலங்கையினுள் நீதி மன்ற அதிகார எல்லைகளை மீண்டும் நிர்ணயம் செய்வதை ஒழுங்கான முறையில் மேற்கொள்ள வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை அரசுக்கு பிரேரணை தெரிவிக்கின்றது. **(பி/vi (1)14/07)**

## XI. பொது நடவடிக்கை

**01. கௌரவ முதலமைச்சர் அத்துடன் நிதித் திட்டமிடல் ,சட்டம் ,ஒழுங்கு ,காணி ,கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் ,மனிதவலு ,மற்றும் தொழில் வாய்ப்பு ,பொறியியல் சேவை அத்துடன் தகவல் அமைச்சர்.**

பிரேரணை

**<u>2014 குறைநிரப்பு மதிப்பீடு – 02</u>**

2014 ஆம் ஆண்டின் பின்வரும் தேவைகளுக்காக ஏற்பாட்டினை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக அதாவது மேல் மாகாண சபையின் அமைச்சுக்கள்/ திணைக்களங்கள்/ காரியாலயங்களுக்காக அரச நிர்வாகச் சுற்றறிக்கை 37/2014 மூலம் அதிகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படியைச் செலுத்த, அத்துடன் கட்டாயமாகச் செலுத்த வேண்டிய சம்பளம், மற்றும் படிகளை செலுத்துவதற்குத் தேவையான மேலதிக ஏற்பாட்டினை பெற்றுக் கொடுக்க, மேல் மாகாண சபையின் உள்ளூராட்சித் தாபனங்களுக்காக அரச நிர்வாக சுற்றிக்கை 37/2013 இன் மூலம் அதிகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படியினைச் செலுத்துவதற்குத் தேவையான மேலதிக ஏற்பாட்டினை ஏற்படுத்துவது, சுகாதார மற்றும் பொது சுற்றிக்கைக்கு இணங்க சுகாதாரத்துறையில் அதிகரிக்கப்பட்ட மேலதிக நேரம் அத்துடன் விடுமுறைத் தின சம்பளக் கொடுப்பனவுக்குத் தேவையான மேலதிக ஏற்பாட்டினை ஏற்படுத்துவது அத்துடன் உள்நாட்டு வைத்திய துறையின் வைத்திய வளங்கல்களுக்காக மேலதிக ஏற்பாட்டினை ஏற்படுத்துவது 2014 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட பிரேரணைக்கு இணங்க கால்நடை வள வைத்திய சேவையை மேம்படுத்துவது தொடர்பாக மேலதிகமான ஏற்பாட்டினை ஏற்படுத்துவது, மாகாண சபை அபிவிருத்தி விடயங்களில் எதிர்பார்த்த இலக்கை அண்மிப்பதற்குத் தேவையான ரூபா. 475 மில்லியன் மேலதிக ஏற்பாட்டினை ஏற்படுத்துவது போன்ற விடயங்களுக்காக தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்படும் 2014 ஆம் ஆண்டின் குறைநிரப்பு மதிப்பீடு - 02 (ரூபா 1,608,099,000/-) ஐ அங்கீகரிக்க வேண்டும்.

**02. கௌரவ பிரசன்ன ரணதுங்க - முதலமைச்சர் அத்துடன் நிதித் திட்டமிடல் ,சட்டம் ,ஒழுங்கு ,காணி , கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , மனிதவலு ,மற்றும் தொழில் வாய்ப்பு , பொறியியல் சேவை அத்துடன் தகவல் அமைச்சர் (மே.மா)**

பிரேரணை

**<u>2014 குறைநிரப்பு மதிப்பீடு - 02 உரிய ஒதுக்கீட்டு நியதிச் சட்டம்</u>**

2014 ஆம் ஆண்டின் குறைநிரப்பு மதிப்பீடு 02 இற்குத் தேவையான ரூபா நூற்று அறுபது கோடியே எண்பது இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரம் (ரூபா. 1,608,099,000/-) ஆகிய நிதியை மேல் மாகாண சபை நிதியத்தில் இருந்து செலுத்துவதற்கும், இலங்கை அரசினால் மானியமாகவோ அல்லது வேறு முறையில் கிடைக்கப்பெறும் நிதியை மேல் மாகாண சபை நிதியத்திற்கு பெற்றுக் கொள்வதற்கு அதிகாரம் வழங்கும் 2014 இன் .......... ஆம் இலக்க ஒதுக்கீட்டு நியதிச் சட்டத்தை அங்கீகரிக்க வேண்டும்.

## XII. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

2014.10.09 ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,

5ஆம் மாடி, Bஅலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.